# மருத்துவக் கல்வி, ஆய்வுகளுக்கு உடல்தானம் தர விரும்புவோர் அதிகரிப்பு

தேசிய உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைப் பிரிவின் கணக்குப்படி, மறைவுக்குப் பிறகு தங்களது உடலை மருத்துவக் கல்வி, ஆய்வுகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கடந்த மூன்று ஆண்டுகளுக்குள் 1,000க்கும் மேற்பட்டோர் உறுதிமொழி அளித்துள்ளனர். 1972ஆம் ஆண்டுக்கும் 2012ஆம் ஆண்டுக்கும் இடையே இந்த எண்ணிக்கை சுமார் 400 மட்டுமே. இணையம் உட்பட பல்வேறு வழிகளில் மேற்கொண்ட விழிப்புணர்வு முயற்சி களால் மக்களிடையே இந்த மாற்றம் விளைந்துள்ளதாக தேசிய உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைப் பிரிவு குறிப் பிடுகிறது. உடல் தானம் தரப் பலர் முன்வந்தாலும் அவர்களில் பலரும் 40 முதல் 60 வயதுக்குட்பட்டோர். இருப்பினும் இத்தகைய உயிரற்ற உடல்கள் தேவையைவிடத் தற்போது குறைவாக இருப்பதாக தேசியப் பல்கலைக்கழகத் தின் யோங் லூ லி லின் மருத்துவப் பள்ளியைச் சேர்ந்த பேராசிரியர் பே பூன் ஹுவாட் கூறியுள்ளார். கொடையாக வழங்கப்படும் உயிரற்ற உடல்கள் மருத்துவம், பல் மருத்துவம், மருந்தகம், தாதியர் துறைகளில் முதலாமாண்டு பயிலும் மாணவர்களுக்கு மனித உடற்கூறு பற்றி அறிந்துகொள்ளப் பெரிதும் உதவுகின்றன. இவ்வாறு மூன்று ஆண்டுகளுக்குப் பயன்படுத்தப்படும் உடல்கள் அதன் பிறகு குடும்பத்தாரிடம் இறுதிச் சடங்கிற்காக ஒப்படைக்கப்படும்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.